**2026 ஜனவரி மாதம் 29– ஆம் தேதி வியாழக்கிழமை**

**கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி**

**O.S. நெம்பர் : 79/2021**

O.S. No.: 79/2021 – சண்முகசுந்தரம் PW1 29.01.2026

த/பெ.ராமசாமி செட்டியார்

**சாட்சி அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:–**

நான் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் என்னுடைய வழக்குச் சொத்தை என் அனுமதியுடன் விற்று அதன் பணப்பலனை எனக்கு கொடுக்காததால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தின் சர்வே எண், விஸ்தீரணம் எனக்கு தெரியுமா என்றால் சர்வே எண்.112, விஸ்தீரணம் 2 ஏக்கர் 84 செண்ட் ஆகும். தாவா சொத்தை வைத்து தான் வங்கியில் கடன் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். எந்த வங்கியில் கடன் வாங்கியுள்ளேன் என்றால் போடிநாயக்கனூரில் உள்ள இந்தியன் வங்கியில் வாங்கியுள்ளேன். இந்தியன் வங்கியில் ஓர் லோனா அல்லது இரண்டு லோனாக கடன் வாங்கியுள்ளேனா என்றால் இரண்டு கடன்களா வாங்கியுள்ளேன். இரண்டு கடன்கள் என்ன தொகைக்கு வாங்கியிருந்தேன் என்றால் ஒரு கடன் ரூ.2,00,000/–, மற்றொன்று ரூ.1,00,000/–, மொத்தம் ரூ.3,00,000/– ஆகும். மேற்படி கடன்கள் அனைத்தும் வங்கியில் வழக்கு தாக்கல் செய்யும்போது தீர்க்கப்பட்டுவிட்டதா என்றால் தீர்க்கப்பட்டுவிட்டது. 1ம் பிரதிவாதிக்கு எந்த வருடம் நான் பொது அதிகாரம் கொடுத்தேன் என்றால் 10.08.2015ம் தேதியில் கொடுத்தேன். அந்த பொது அதிகார பத்திரத்தில் எனது மாமனாரும், எனது மகளும் சாட்சி கையொப்பம் இட்டுள்ளார்கள் என்றால்

சரிதான். முகவர் என்ற முறையில் 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு 2018ம் ஆண்டில் கிரையம் செய்து கொடுத்தார் என்றால் சரிதான்.

வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 29.01.2026 அன்று வியாழக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI Digitally signed by G SREE DEVI Date: 2026.01.29 15:10:43 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.

29.01.2026.